தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

திங்கட் கிழமை, 1973 டிசம்பர் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

Non-technical Lecturers in Science and English serving in Alagappa Polytechnic, Karaikudi.

* 178. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) Whether the Non-technical Lecturers in Science and English serving in Alagappa Polytechnic, Karaikudi are not given the scales of salary sanctioned to other Lecturers serving in the same Polytechnic; and

(*b*) if so, the reasons therefor?

காரைக்குடி அழகப்பா பல்தொழில் பயிற்சிக் கல்லூரியில் அறிவியல், ஆங்கிலம் கற்பிக்கும் தொழில் நுட்பம் அல்லாத துறை விரிவுரையாளர்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காரைக்குடி அழகப்பா பல்தொழில் பயிற்சிக் கல்லூரியில் அறிவியல், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்பிக்கும் தொழில் நுட்பம் அல்லாத துறை விரிவுரையாளர்கட்கு அதே நிறுவனத்தில் பணியாற்றும் ஏனைய விரிவுரையாளர்கட்கு ஒப்பளிக்கப்பட்ட சம்பள விகிதங்களில் ஊதியம் வழங்கப்படுவதில்லையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 'Associate Lecturers' பதவிகள்தான் இப்பாடங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொறியியல் பாட சம்பளத்திற்கும் ஆங்கிலம், அறிவியல் பாட (Associate Lecturers) சம்பளத்திற்கும் வேறுபாடு கிடையாது.